THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Tuesday, the 25th January 1972.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, MR. CHAIRMAN (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

I. FELICITATIONS TO THE HON. THE MINISTER FOR EDUCATION AND LOCAL ADMINISTRATION ON THE CONFERMENT OF THE DOCTORATE DEGREE ON HIM BY THE MADURAI UNIVERSITY.

மிஸ்டர் சேர்மன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்குச் சென்ற 23—1—1972 ஞாயிறு மதுரைப் பல்கலைக் கழகத்தில் பாராட்டளித்த டாக்டர் பட்டத்திற்காக இம்மாமன்றம் தனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது. (கை தட்டல்) நாவலர் அவர்களே, நீங்கள் தமிழுக்காகவும், தமிழர்க்காகவும், செய்து கொண்டிருக்கின்ற இலக்கிய சேவைக்காக, தமிழ் ஆய்வதற்காக, தமிழின் மேன்மையை உலகம் அறிந்து தமிழ் மொழி தமிழர்க்கே அல்லாது எங்களுக்கும் சொந்தம் என பிற நாட்டார் போற்றி வளர்ப்பதற்குக் காரணமாயிருந்த சங்கம் அமைத்த மதுரையில், அதை ஒரு காலத்தில் ஆண்ட பாண்டியன் நெடுஞ்செழியன் பெயரையே தாங்கி, இருபதாம் நூற்றாண்டின் நெடுஞ்செழியன் தங்களுக்கு பட்டமளித்து, தக்கோரைச் சிறப்பிப்பது தமிழரின் கடமை என்ற முடிவில் தங்களைப் பாராட்டியிருக்கிறது.

தமிழகத்தின் கல்வி அமைச்சர் என்பதால் மட்டுமே அல்லாமல் சுமார் முப்பது ஆண்டுகளாக தாங்கள் இலக்கியத்திற்குச் செய்த சேவையை, மேடைகளில் ஒரு மொழியின் தேவை, சிறப்பு இயல்பு என்பவைகளை ஆயிரக்கணக்கான ஆதாரங்களைக் காட்டி ஆற்றிய பேருரையால் உங்களைத் தமிழகமும் அதன் அறிவாலயங்களும் மறக்கவில்லை, மறக்காது என்பதையே நீங்கள் பெற்ற பட்டம் காட்டுகிறது. அந்த வகையில் நீங்கள் பெற்ற சிறப்பு எங்களுடையது என எண்ணி இம்மாமன்றம் நீங்கள் நீடுழி வாழவும், உங்கள் அரசியல் இலக்கியப் பணி மேன்மேலும் சிறக்கவும் பாராட்டுகிறது. (கை தட்டல்).

II. QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Clash between the Students and the Workers of the State Transport Department.

* 16 *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM AND THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether it is a fact that there was a clash between the students and the workers of the State Transport Department at Anna Nagar, Madras, on 17th August 1971; and

(*b*) if so, the details thereof?